உ

சிவமயம்

ஸ்ரீ வீரகத்தி விநாயகர்துணை



# கந்தரோடை ஆலடிப்பதி அருள்மிகு ஸ்ரீவீரகத்தி விநாயகர் திருவூஞ்சல் பாக்கள்

ஆக்கம்:
கவிஞர். ச. வே. பஞ்சாட்சரம்

# கந்தரோடை ஆலடிப் பதி

## அருள் மிகு

## ஸ்ரீவீரகத்தி விநாயகர்



## திருவூஞ்சல்

### காப்பு

நீருடுத்த நிலமடந்தை ஈழத்தாயின்
நெற்றிநிகர் கோநகராம் கந்தரோடைப்
பேருடுத்த தொன்னகரின் தமிழனாட்சிப்
பெருமைமிகும் நகர்த்துவார கணபதிப்பேர்
*வீரகத்தி விநாயகனா*ங் கருணைவள்ளல்
விழைந்தாடுந் திருவூஞ்சல் விளங்கப்பாட
பாரதத்தைக் கூறெடுத்த கொம்பொடித்துப்
படைத்துகந்த பிரணவன் தாள் காப்பதாமே!

1. மெய்யறிவு விட்டமென வினையிரண்டும்
விட்டநிலை இறையுணர்வே வடங்களாகச்
செய்யமனப் பத்திமையே பீட மாகத்
திகழடியார் சிந்தையெலாம்ஊஞ்சலாடும்
துய்யவனே! வயல்கள் மலி கந்தரோடை
தொழுபவனே கணக்கர் வளவமர்ந்த கோவே!
வெய்யகலி தீர உவந்தாடீரூஞ்சல்.
வீரகத்தி விநாயகரே ஆடீரூஞ்சல்.

2. வான் களித்துப்பொழிமழைகள் வண்டல் நித்தம்
வளம்பருக்கும்வயல் பொழில்கள் பெய்யுமதாரைத்
தேன்வழுக்கி யாற்றிலெழு வெள்ளம் பாய்ந்து
திரையெழும்பல் குளக்கந்தரோடையூரா!
நான்மறைகள் ஆகமங்கள் வடங்கள் உன்றன்
நல்லருளே விட்டம், உபநிடதம் பீடம்!
ஆன்மமல வழுக்ககல ஆடீரூஞ்சல்
அருள்வீர கத்தியையா ஆடீரூஞ்சல்.

3. அங்கணம்மைக் கடவைதனில் மீனாட்சித்தாய்
அருகமர்ந்த சுந்தரேசர் கோவில் மேற்கில்!
மங்கலவற் றாக்கை விசா லாட்சி விஸ்வர்
மகிழ்ந்துறையுங் கோவில் மிக அருகில் செந்நெல்
பொங்கு வயற் பூம்புனற்கற் பொக்கணைக்கண்
பொலிந்துறைய இன்னுமொருகோவில்பெற்றாய்!
இங்கருளானந்த விநாயகனும் நீயே
எழில்வீர கத்தியையா ஆடீரூஞ்சல்.

4. பட்டிகளாய்ப் பசு மறிகள் பரந்தே மேயும்
பனை வடலித் தோப்புகளில் பறவைக் கூட்டம்
சொட்டும் நறைக்குரல்களினால் துதித்துப் பாடும்
தூயவனே பிரணவனே தொந்தித்தும்பீ!
கெட்டகயமுகவசுரன் கீழாய்க் கொண்ட
கீர்த்தியனே! கந்தரோடைஞான வித்தே!
வெட்டவெளி அரசடியும் வீற்றிருப்போய்
வீரகத்தி விநாயகரே ஆடீரூஞ்சல்.

5. மண்சாணி மஞ்சளது பிடியிற் சூட்டும்
வளரறுகம் புல்லினிலும் வருவோய் ஐயா
பெண் புலவர் ஔவை மகிழ் முத்திதந்தோய்
பெருக்கெழும்புங் காவிரியைத்தரணிக்கீந்தோய்
சண்முகனின் வீடு முழு ஊரும் ஆன
தவமலிந்த பதி கந்தரோடை தன்னை
விண்புகழும் நகராக விளக்கும் எங்கள்
வீரகத்தி விநாயகரே ஆடீரூஞ்சல்.

6. முக்கண்ணன் உன் கோயில் கட்டக்காசு
முடைநின்றே தடைசெய்யத் தொண்டர் ஏங்கித்
துக்கித்துச்சோர்கையிலே கருணை கூர்ந்து
துதித்துலகே காணிக்கை மழையைத் தூர்க்க
முக்கண்ணின் ஆன்கன்றாய் உதித்தாய் ஊரில்
முடித்துன்றன் திருப்பணியை மறைந்தாய் ஐயா!
விக்கினங்கள் தீர்ந்தனவே ஆடீரூஞ்சல்.
வீரகத்தி விநாயகரே ஆடீரூஞ்சல் !

7. இலங்கையிலே தமிழ் சைவப்பள்ளி பல்க
இன்றென்ன அன்றென்ன என்றும் என்ன
துலங்கு பணிஆற்றுமுயர் கல்விமான்கள்
தோன்றுமிடம் இக்கந்தரோடை என்று
புலங்கொண்டே சான்றோர்கள்போற்ற வைத்த
புண்ணியஎட் பொரிஅவலை மோதகத்தை
நலந் திகழ மிசைபவனே ஆடீரூஞ்சல்.
நம் வீரகத்தி விநாயகரே ஆடீரூஞ்சல் !

8. ஆவணியிற் சதுர்த்தியிலே பூத்தோய் செய்கை
அத்தனைக்கும் முன்வணங்கப்படுவோய் செஞ்சொற்
பாவணியும் கீர்த்திகளில் மிக்கோய்! மாலோன்
பாம்புருவச் சாபமதைத் தீர்த்தோய்! வள்ளி
தாவணியாய்த் தழுவணியாய் முருகத்தம்பி
தனைப்புல்லப் பயமூட்டித் துரந்த தும்பி !
மேவணியே நங்கந்தரோடை யூர்க்கு
வீரகத்தி விநாயகரே ஆடீரூஞ்சல் !

9. தங்கமணி மௌலியொளி வீச வீசத்
தந்த முகத் தைங்கரனே ஆடீரூஞ்சல் !
அங்குச பாசங் செவிகள் ஆடஆட
அடியார்கை தொட்டாட்ட ஆடீரூஞ்சல் !
சங்கரனார் தாயுமையார் சார்ந்தே பார்க்கச்
சப்பைக்கால் ஆனைமுகா ஆடீரூஞ்சல்
இங்கடியார் விழிகளெழக் கண்ணீர் வெள்ளம்
வீரகத்தி எழிற்கரியே ஆடீரூஞ்சல்

10. பொங்கிடுவார் பூசை அபிடேகஞ் செய்வார்
புலர்வுச்சி அந்தியிராத் தொழுவர் நோற்பார்
எங்களுயிர்க்கிறையென்பர் கேட்பதெல்லாம்
ஈந்தருளும் கற்பகமே என்பார் அன்னம்
பங்கிடுவார் பரவிடுவார் அடியார் நாளும்
பாசமுடன் ஆட்டிடவே ஆடீரூஞ்சல் !
வெங்கனல் வேள்வி புரிவார் கந்தரோடை
வீரகத்தி விநாயகரே ஆடீரூஞ்சல் !

# வாழ்த்து

கந்தநகர் இந்த நகர் அன்றி இந்தக்
காசினியே சுந்தரமாய் வாழிவாழி
மந்தைமலி ஆவினங்கள் வேதம் வாழி
மாதவர்கள் மலியவரு சைவம் வாழி
அந்தணர்கள் அனல்வேள்வி பெருக்கி வாழி
ஆயகலை அத்தனையும் அருளைப்பாய்ச்சச்
செந்தமிழும் ஞானிகளும் சிறந்து வாழி
திகழ் வீரகத்தி விநாயகரே வாழி ! ! !

ஓம் சுமுகாய நம
ஓம் ஏகதந்தாய நம
ஓம் கபிலாய நம
ஓம் கஜகர்ணகாய நம
ஓம் லம்போதராய நம
ஓம் விகடாய நம
ஓம் விக்னராஜாய நம
ஓம் கணபதயே நம
ஓம் தூமகேதவே நம
ஓம் கணாத்யக்ஷாய நம
ஓம் பாலச்சந்த்ராய நம
ஓம் கஜானனாய நம
ஓம் வக்ரதுண்டாய நம
ஓம் சூர்ப்பகர்ணாய நம
ஓம் ஹேரம்பாய நம
ஓம் ஸ்கந்தபூர்வஜாய நம

